IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO.150/2012

Deposition of Witness : DW - 1

Name : குமரேசன்

Father's Name /W/o : லேட்.கோபால்

Religion : இந்து

Caste : -

Calling : BSNL அரசு ஊழியர்

Address : அரசாத்தம்மன் கோயில் தெரு, அரக்கோணம்.

**Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 22.08.2023.**

குறுக்கு விசாரணை :-

1. இந்த வழக்கின் நான் 1ம் பிரதிவாதி, என் தம்பி இரண்டாம் பிரதிவாதி என்றால் ஆம். 3ம் பிரதிவாதி காமாட்சி யார் என்றால் என்னிடம் நிலத்தை வாங்கியவர். வாதிகள் 7 பேரும் என் உடன் பிறந்த சகோதரிகள் என்றால் ஆம். தாவா அ அட்டவணை சொத்துக்களை என் தந்தை தான் கிரையம் வாங்கினார் என்றால் ஆம். என் தந்தை கோபால் அவர் சொந்த உழைப்பில் தான் அ அட்டவணை சொத்தை வாங்கினார் என்றால் ஆம். தாவா அ அட்டவணை சொத்து இலுப்பைதண்டலம் கிராமத்தில் உள்ளது என்றால் ஆம். தாவா பி அட்டவணை சொத்து இலுப்பைதண்டலம் கிராமத்தில் உள்ளது என்றால் ஆம். பி அட்டவணை சொத்தை என் தாயார் பொன்னம்மாள் பெயரில் என் தந்தை வாங்கினார் என்றால் இல்லை என் தந்தை பெயரில் தான் உள்ளது.

2. பி அட்டணை சொத்து என் தந்தை பெயரில் இல்லை என்றாலும், ஆவண எண்.3254/1978 படி பி அட்டணை சொத்து என் தாயார் பொன்னாம்மாள் பெயரில்

உள்ளது என்றால் இல்லை. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தமிழ் தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் பொன்னம்மாள் பெயரில் சொத்து உள்ளதாக உள்ளது என்றால் இல்லை. சொத்து என் தந்தை பெயரில் தான் உள்ளது. நான் வேண்டும் என்றே தந்தை பெயரில் உள்ளது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா கிரையம் பெற்ற சொத்துக்களை அவர் காலம் வரை அவர் தான் உரிமையாளராக பயிர் செய்து அனுபவித்து வந்தார் என்றால் ஆம். பி அட்டணை சொத்துக்களை என் அம்மா தான் அனுபவித்து வந்தார் என்றால் நானும் என் தாயாரும் அனுவித்து வந்தோம். என் தாயார் 2001ல் காலமானார். என் தாயார் மட்டும் தான் இந்த சொத்தை அனுபவித்து வந்தார் என்றாலும், நானும் சேர்ந்த அனுவித்து வந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றா் சரியல்ல.